**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் , திருவொற்றியூர்**

**OS .No.78 /2018**

இந்நீதிமன்றத்து மூன்றாம் நிலை எழுத்தர் திரு.சங்கர்கணேஷ், அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு செப்டம்பர் மாதம் 22-ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி – 22.09.2025**

**பெயர் – டி . உமா சங்கர்**

**த/பெ – A.தமோதரன்**

**தொழில் – சொந்த தொழில்**

**ஊர் – திருவொற்றியூர்**

**வயது – 49**

**சாட்சி** - DW3

**விசாரணை தொடங்கும் நேரம் : 12.00 P.M**

**குறுக்கு விசாரணை :–**

**1.** நான் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் டி.எச் ரோடு, அவர்லேடி பள்ளிக்கு அருகில் வசித்து வருகிறேன். நான் என்ன படித்துள்ளேன் என்றால் டிப்ளமோ முடித்து விட்டு பி.இ., படித்துள்ளேன். நான் இவ்வழக்கில் சாட்சியம் சொல்வதற்கு நீதிமன்றத்தில் இருந்து சம்மன் எதுவும் எனக்கு வரவில்லை என்றால் சரிதான். நான் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளபடி பிரதிவாதி எனக்கு 15 வருடங்களாக நண்பர் ஆவார் என்றால் சரிதான். அதனால் பிரதிவாதி அழைத்ததின் பேரில் தான் நான் சாட்சியம்

அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியும் என்பதால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்,

2. பிரதிவாதி வழக்கின் விவரங்களை எனக்கு கூறி சாட்சியம் அளிக்க கூறினார் என்றால் சரியல்ல பிரதிவாதியின் உடன் இருந்ததால் வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியும். நான் குடியிருந்து வரும் இடத்திற்கும் தாவா சொத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் ½ கிலோ மீட்டர் தூரம் இருக்கும். வாதி எந்த தேதியில் பிரதிவாதியிடம் வாடகைக்கு வந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதியும் பிரதிவாதியும் வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். வாடகை ஒப்பந்தம் எந்த தேதியில் ஏற்படுத்தப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

3. வாடகைஒப்பந்தத்தில் நான் சாட்சி கையெழுத்து போட்டேனா என்றால் போடவில்லை. தாவா சொத்தில் எத்தனை போர்சன்கள் உள்ளன என்றால் இரண்டு போர்சன்கள் உள்ளன. வாதி எந்த போர்சனில் குடியிருந்து வருகிறார் என்றால் மேற்கு போர்சனில் குடியிருந்து வருகிறார். பிரதிவாதி எந்த போர்சனில் குடியிருந்து வருகிறார் என்றால் கீழ்தளத்தில் குடியிருந்து வருகிறார். வாதி மேல் தளத்தில் குடியிருந்து வருகிறாரா என்றால் ஆமாம்.

4. தாவா சொத்தினை வாதி எப்போது கிரையம் பெற்றார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் 9 வருடங்களுக்கு முன்பு கிரையம் பெற்றார். கிரையம் செய்யும் பொழுது காலிஇடமாக இருந்ததா அல்லது கட்டிடங்கள் இருந்ததா என்றால் கட்டிடங்கள் இருந்தது. வாதி குடியிருந்த கட்டிடத்திற்கு அட்வான்ஸ் தொகை மற்றும் வாடகை எவ்வளவு என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அட்வான்ஸ் தொகை ரூ.50 ஆயிரம் ஆகும். வாடகை எவ்வளவு என்று எனக்கு தெரியாது. அட்வான்ஸ் தொகை ரூ.50 ஆயிரம் என்ற விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் காவல் நிலையத்தில் தான் தெரியும்.

5. வாதி வாடகைக்கு வரும் பொழுது எவ்வளவு வாடகை வெளியேறும் போது எவ்வளவு வாடகை என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. பிரமாண வாக்கு மூலத்தில் நான் கூறியுள்ளபடி வாதி தாவா சொத்தினை விட்டு வெளியேறும் போது நான் அங்கு தான் இருந்தேன் என்றால் சரிதான். வாதி காலி செய்யும் விவரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் பிரதிவாதி போனில் அழைத்து விவரத்தை என்னிடம் தெரிவித்து வரும்படி கூறினார். பிரதிவாதி என்ன கூறினார் என்றால் வாதி காலி செய்வதாகவும் காலி செய்து சாவியை தன்னிடம் ஒப்படைக்க உள்ளதாகவும் தெரிவித்தார்.

6. வாதி காலி செய்து சாவியை ஒப்படைத்துவிட்டாரா என்றால் காலி செய்து சாவியை ஒப்படைத்துவிட்டார். தாவா சொத்தில் ஏற்பட்டுள்ள சேதங்கள் குறித்து பிரதிவாதி வாதியின் பேரில் இது நாள் வரையில் நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளாரா என்றால் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. பிரதிவாதி அவருடைய வீட்டில் இருந்து வாடகைதாரர்கள் காலி செய்யும் பொழுது என்னை தான் எப்பொழு தும் அழைப்பாரா என்றால் அவருக்கு நான் சகோதரர் போன்றவர் அதனால் என்னை அழைப்பார்.

7. வாதி காலி செய்யும் போது வீட்டினை நல்ல முறையில் தான் பிரதிவாதியிடம் ஒப்படைத்தார் என்றும் பிரதிவாதி எனக்கு நண்பர் என்பதனால் அவருக்கு சாதகமாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் பொய்யான வழக்கினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று நான் கூறியுள்ளேன் என்றும் வழக்கிற்கு மூன்றாம் தரப்பினரான என்னால் அவ்வாறு கோரமுடியாது என்றால் சரியல்ல.

( குறுக்கு விசாரணை முடிந்தது )

**விசாரணை முடியும் நேரம் :– 12.25 P.M.,**